பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 25 வெள்ளிக்கிழமை 08.05.2020 கதிர் 184

## 823 பேருக்கு தொற்றியது கொரோனா

கொழும்பு, மே 08
இலங்கையில் மேலும் 18 பேருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. பக்கம் 02

# தீர்வை குழப்பியவர்கள் ராஜபக்ஷ அணியினரே!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, மே 08
நல்லாட்சி அரசில் அரசியல் தீர்வுக்கான புதிய அரசமைப்பு மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை ஆகிய விவகாரங்களைக் குழப்பியடித்தவர்கள் ராஜபக்ஷ அணியினரே. அவர்கள்தான் இனவாதிகளையும் இயக்கித் தீர்வு விடயங்களுக்கு எதிராக வெளியில் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தச் செய்தார்கள்.

– இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ. பக்கம் 02

### இனி இது ரகசியம் அல்ல!

நாட்டை – ஏன் முழு உலகத்தையும் கூட – உலுப்பி வருகின்றது கொரோனா வைரஸ்.

அந்தத் தொற்று ஏற்படுத்தியுள்ள களேபரங்களுக்கு இடையில் தொற்றுத் தொடர்பான சோதனையும் பல குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயத்தில் தெற்கில் குழப்பம் வேறு பக்கம் 02

## ஏழாலையில் சிக்கிய கொள்ளைக் கும்பல்!

யாழ்ப்பாணம், மே 08
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்வேலியில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வேளை மூன்று வீடுகளில் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டமை மற்றும் கொள்ளையிட்ட நகைகளை அடகு வைத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் 2 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவம் பக்கம் 04

# கொரோனா அச்சநிலை முற்றாக நீங்கவில்லை!


## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை



கொழும்பு, மே 08
கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் இதுவரை 30 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்துள்ள நிலையில் அவற்றில் மூன்று வீதமான வைரஸ் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். ஆகவே வைரஸ் தொற்றுநோய் சமூகப் பரவலாக மாறாத வகையில் தடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க, இதுவரை முன்னெடுத்த வைத்திய பரிசோதனைகளை இத்துடன் பக்கம் 04

## விக்னேஸ்வரனிடம் சம்பந்தன் ஏமாந்தார் என்பது உண்மையே!

### அருந்தவபாலன் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், மே 08
சுமந்திரன் கூறுவதுபோல சம்பந்தர் நீதியரசர் விக்னேஸ்வரனிடம் ஏமாந்தார் என்பது உண்மையே.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க. அருந்தவபாலன். இவ்விடயம் தொடர்பாக பக்கம் 04

## நாய் சுட்டுக் கொலை: முன்னாள் எஸ்.பி. கைதாகிப் பிணையில்!

நீர்கொழும்பு பெரியமுல்லை பகுதியில், நேற்றுக் காலை நாய் ஒன்று சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பக்கம் 02

## கடற்படைத் தம்பதியின் குழந்தைக்கும் தொற்று

ஒரு வயதும் ஒரு மாதமும் நிரம்பிய குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

வெலிசறை முகாமை சேர்ந்த கடற்படை தம்பதியின் குழந்தைக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் பக்கம் 02

## அலரிமாளிகை, ஜனாதிபதி இல்லத்தில் எத்தனை கொரோனாச் சோதனைகள்?

### சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி கேள்விகணை

அலரிமாளிகை, ஜனாதிபதியின் இல்லம் போன்றவற்றில் எத்தனை கொரோனாத் தொற்று பரிசோதனைகள் நடத்தப்பட்டன? எப்போது நடத்தப்பட்டன? அவற்றின் விவரம் யாது?

– இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்கவிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பு.

கொரோனாத் தொற்று மற்றும் பரிசோதனைகள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைகள் சட்டத்தின் கீழ் அந்தக் கட்சியின் எட்டு உறுப்பினர்கள் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள 14 கேள்விகள் அடங்கிய கேள்விக் கொத்திலேயே மேற்படி விடயமும் அடக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் திறந்த பின்னரே உயர்தரப் பரீட்சை குறித்து முடிவு

எதிர்வரும், ஓகஸ்ட் மாதம், க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்படுமா என்பது குறித்து, பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்னரே முடிவு செய்யப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், சனத்பூஜித தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் எப்போது திறக்கப்படும் என்பது குறித்து கல்வி அமைச்சு இன்னமும், முடிவு செய்யவில்லை. பாடசாலைகள் எப்போது திறக்கப்படும் என்பதைப் பொறுத்தே, உயர்தரப் பரீட்சை குறித்த எந்தவொரு முடிவும் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஜூன் நடுப் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல்

### லக்ஷ்மன் யாப்பா கூறுகிறார்

கொழும்பு, மே 08
நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் இடம்பெறும் என எதிர்பார்ப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலமான அரசு தோற்றம் பெறவேண்டுமாயின் தேர்தல் முறையில் திருத்தம் செய்வது பக்கம் 02

## ஊரடங்குவேளை பணியாளர்களை பணிக்கு அழைத்த ஹலோட்ரஸ்ட்!

யாழ்ப்பாணம், மே 08
நாடுமுழுமையிலும் கொரோனா அச்சுறுத்தல் நீடிக்கும் நிலையில் – தொடரும் ஊரடங்கு நடைமுறைக்கு மத்தியில் – வடக்கின் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த ஆயிரம் ஊழியர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்பும்படி ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் அவசர அழைப்பு விடுத்துள்ளதால் ஊழியர்களும் குடும்பத்தாரும் அச்சநிலையை எதிர்கொண்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

கண்ணிவெடி அகற்றும் அமைப்பான இந்த நிறுவனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 800 தொடக்கம் 1000 வரையிலான ஊழியர்களை இன்று பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதிரி.

இலங்கையில் இதுவரை முப்பதாயிரம் கொரோத் தொற்றுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றின் துல்லியம் தொடர்பாகவே தெற்கில் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு பெண் தாதி உட்பட மூவருக்கு முதலில் தொற்று என்று வந்த முடிவு, பின்னர் அடுத்த மீள் சோதனையில் அப்படி இல்லை என்று தெளிவானது. இது பற்றிய செய்திகளை நேற்றும் முன்தினமும் வாசகர்கள் வாசித்திருப்பர். மறந்திருக்க மாட்டார்கள்.

இது தொடர்பில் அரச மருத்துவ ஆய்வுகூடங்களின் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

கடைசியாக கொரோனாவினால் உயிரிழந்தவர் (9ஆவது மரணம்) என அறிவிக்கப்பட்ட பெண் தொடர்பான தொற்றுப் பரிசோதனை முடிவும் –

ராஜகிரிய, மோதரை, கொலன்னாவை ஆகிய பகுதியில் இருந்து வந்த நோயாளர்கள் மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையை சேர்ந்த தாதி ஒருவர் தொடர்பிலும் கடந்த செவ்வாயன்று மேற்கொள்ளப்பட்ட தொற்றுப் பரிசோதனை முடிவுகளும் –

சந்தேகத்துக்குரியவை என மேற்படி சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்திருக்கின்றார்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலும், கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட 13 சோதனைகள் சந்தேகத்துக்குரியவை என்று அவர் கூறியிருக்கின்றார்.

இது குறித்து சுகாதார அமைச்சு விசாரணை நடத்தும். முடிவு வரும். பிரச்சினை என்னவென்று அம்பலமாகும்.

அந்தப் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் – அவற்றின் ஆய்வுகூடங்கள் மேற்கொள்ளும் பரிசோதனைகள் தொடர்பில் – சுமத்தப்படும் குற்றச்சாட்டும் சந்தேகமும் ஒன்றுதான். அது அந்த முடிவுகள் துல்லியமானவைதானா என்பதுதான்.

ஆனால் அதே போன்று வடக்கிலும் ஆய்வு கூடப் பரிசோதனை தொடர்பில் ஒரு குழப்பம் உண்டு.

அது ஆய்வு கூடத்தினால் வெளியிடப்படும் முடிவுகளின் துல்லியம் பற்றியதல்ல. முழு ஆய்வுகூடம் பற்றியது.

வடக்கில் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகளுக்கு வாய்ப்பின்றி, தினசரி தொற்றுச் சந்தேகத்துக்குரியவர்களின் மாதிரிகளை எடுத்து அநுராதபுரத்துக்கு அனுப்பி விட்டு முடிவு வருவதற்கு நோயாளரும், மருத்துவர்களும், சுகாதார அதிகாரிகளும், ஆரம்ப நாள்களில் ஓரிரு தினங்கள் காத்திருந்தமையை நாம் மறந்திருக்க முடியாது.

அந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக 'வராது வந்த மாமணி' போல யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஆய்வுகூடத்தில் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் வெற்றிகரமாக ஆரம்பித்தன.

இப்போது யாழ்.ஆஸ்பத்திரியின் மருத்துவ ஆய்வுகூடத்திலும் அதைச் செய்கின்றார்கள்.

அதனால், யாழ்ப்பாணத்தில் தேவைப்பாட்டால் தினசரி நூறு முதல் நூற்றியிருபத்தைந்து தொற்றுத் தொடர்பான சோதனைகள் நடத்தக்கூடிய வலிமை கிட்டியிருக்கின்றது.

இப்போது இந்த வலிமைக்கு ஆப்படிக்கும் வேலை 'கற்றறிந்த' தரப்பு ஒன்றினால் சதித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் கசிந்துள்ளன.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டமை போல வடக்கில் இந்தக் களேபரம் தொற்றுப் பரிசோதனையின் துல்லியம் தொடர்பில் கிளம்பவில்லை.

மக்களின் உணர்வை – உணர்ச்சியை – இலகுவில் தட்டி எழுப்பக் கூடிய பாதுகாப்புத் தொடர்பில் கிளப்பப்பட்டிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒரு குறிப்பிட்ட ஆய்வு கூடத்தில் இந்தப் பரிசோதனை பாதுகாப்பின்றி நடைபெறுகின்றது, அதனால் கொரோனாத் தொற்று யாழ்.பல்கலைக்கழகம் முழுவதும் – மாணவர்கள் எல்லோருக்கும் – பரவிப் பெரும் ஆபத்து நேரப் போகின்றது என்ற பீதிப்பூதமே கிளப்பி விடப்பட்டிருக்கின்றது.

வழமைபோல சமூக ஊடகங்களை வசமாகப் பயன்படுத்தித் தூண்டி விட்டு, மேற்படி கொரோனாத் தொற்றுச் சோதனை தொடர்பான வடக்கின் வலிமையை நாசம் பண்ணுவதுதான் இந்தச் சதியின் கருத்து (Intention).

ஆனால், இந்தச் சதி வலைப் பிரகாரகர்களின் நோக்கம் (Motive) வேறு. அது கற்றறிந்த புத்திஜீவிகளின் வித்துவக்காய்ச்சல், தொழில்நுட்பத் தரப்புகளின் போட்டி, பொறாமை என்று பல அடிப்படைகளைக் கொண்டது என்கின்றார்கள்.

எது, எப்படி என்றாலும், கொரோனாத் தொற்றுப் பரிசோதனையைச் செய்யும் ஓர் ஆய்வுகூடத்தின் அந்த சோதனை தொடர்பான பாதுகாப்பில் சந்தேகம் இருக்குமானால் – அதனால் ஆபத்து நேரலாம் என்று உண்மையில் கருதப்படுமானால் – அது பற்றிய விடயங்களை கற்றறிந்த தரப்புகள் பெயர் குறிப்பிட்டு, தகுதி நிலையுடன் வெளிப்படுத்தி, அம்பலப்படுத்துவது தானே சரியானது. அதுதானே சமூகப் பொறுப்புடைமை!

அதை விடுத்து, சந்தேக விதைகளை அநாமதேயமாகத் தூவி விதைத்து, சமூக ஊடகங்கள் ஊடாகக் குழப்பம் பண்ணி, குசும்பு பண்ணுவது நியாயமா?

ஆனாலும் இந்த விடயத்தில் ஆறுதல் தரும் ஒரு செய்தி கிடைத்திருக்கின்றது.

இது யாழ்.பல்கலைக்கழக வித்துவச் செருக்குகளுக்கு மட்டும் உரிய விவகாரம் அல்ல. நாட்டையே உலுப்பி நிற்கும் கொரோனாக் கட்டுப்படுத்தும் தேசப்பிரச்சினை. அதற்கு ஆப்படிக்கும் இந்த முயற்சி குறித்து அரசின் பல்வேறு உளவுப் பிரிவுகளுக்கும் விசாரணைக்கான உத்தரவு பறந்திருப்பதாகத் தகவல்.

புலனாய்வு விசாரணைக்கான பல்வேறு அணிகளும் தனித்தனியாக – வெவ்வேறு மட்டங்களில் –களமிறக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கசிந்தது. முகப் புத்தகப் 'போராளிகள்'தான் முதலில் விசாரணை வலைக்குள் வீழ்வார்கள் எனத் தெரிகின்றது. முகப் புத்தகக் களத்தில் இந்த விடயங்களில வாள் சுழற்றி, சண்டித்தனம் காட்டிய தரப்புகள் தமது விதண்டாவாதங்களுக்கு ஆதாரங்கள் இருக்குமானால் – தேடித் திரட்டி வைத்துக்கொள்வது நல்லது. விசாரணையாளர்கள், புலனாய்வார்கள் ஊடுருவி வந்து கழுத்தைப் பிடித்த பின்னர் ஆதாரங்களைத் தேடுவது கஷ்டமாக இருக்கும்.

ஆனால் வரக் கூடிய துணைவேந்தர் தெரிவு விவகாரத்தை இலக்கு வைத்துத்தான் இத்தகைய அபாண்டத்தைச் சோடித்துக் குழப்பம் எத்தனித்தோம் என்ற விளக்கத்தை உளவுப் பிரிவினரும் புலனாய்வுத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது நிச்சயம்.

சம்பந்தப்பட்ட ஆய்வு கூடத்துக்கு வந்து போகின்றவர்களில் ஒருவருக்குப் பின்நாள்களில் ஏதேனும் வகையில் கொரோனாத் தொற்று வந்து விட்டால், அது அந்த ஆய்வுகூடம் மூலமே வந்தது என்று காட்டுவதற்கு வசதியாக இருக்கும் எனக் கருதி, அந்த ஆய்வுக் கூடத்துக்கு வந்து போவோரை எதிர்ப்பக்கத்தில் இருந்து இரகசியமாகக் கைத் தொலைபேசியில் வீடியோ பண்ணி பதிவு செய்யும் கைங்கரியம் வரை விடயங்கள் அரங்கேறுவதாக ஒரு பேச்சு.

சரி நல்லதுதான். இப்படி எல்லாம் முற்கூட்டியே கணக்கிட்டுக் காய் நகர்த்தும் பிரகிருதிகள் தமது ஆபத்து எச்சரிக்கையைக் கற்றறிந்த தகுதி நிலை மட்டத்தில் பெயர், பதவித் தரம் குறிப்பிட்டுப் பகிரங்கமாக வெளிப்படுத்தினால் என்ன?

இப்படிச் செய்யாமல் இருப்பதில்தான் அவர்களின் குசும்பே தங்கியிருக்கின்றது.

தொழில் (நுட்ப/சங்க) பிரதிநிதிகளும் கூட உளவுப் பிரிவின் கண்காணிப்பு வலயத்துக்குள் வருகின்றார்கள் என்பது உள்வீட்டுப் பேச்சு.

இந்தப் பிரச்சினை என்ன வடிவம் எடுக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

– மின்னல் –

## தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவினர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வெறும் வாக்குறுதிகளைத்தான் வழங்குவார்கள். அவற்றை ஒருபோதும் அவர்கள் நிறைவேற்றவே மாட்டார்கள். இது கடந்த கால வரலாறு. இனியும் அவ்வாறுதான் நடக்கும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அலரி மாளிகைக் கூட்டத்தில் கலந்து கொண்ட இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவர்களைத் தனது வீட்டுக்கு அழைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, புதிய அரசமைப்பு மற்றும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் பல வாக்குறுதிகளையும் வழங்கியுள்ளார்.

இந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷ அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அதை மறந்தேவிடும். தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் ராஜபக்ஷாக்கள் நிறைவேற்றியதாக வரலாறே இல்லை.

ஆனால், நல்லாட்சி அரசின் காலத்தில் நாம் அரசியல் தீர்வு விடயம், அரசியல் கைதிகளை முழுமையாக விடுவித்தல் ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் தவிர்த்து தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தோம். படையினர் வசமிருந்த பெருமளவிலான காணிகளை விடுத்தோம். ராஜபக்ஷவினரும் இனவாதிகளும் குழப்பியடிக்காவிட்டிருந்தால் புதிய அரசமைப்பு நிறைவேறியிருக்கும். அரசியல் கைதிகள் அனைவரும் சிறைகளிலிருந்து வெளியே வந்திருப்பார்கள்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எமது கூட்டணி நாடாளுமன்றத்தில் ஆட்சிக்கு வந்தால் கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு இனவாதிகளினதும் ராஜபக்ஷாக்களினதும் வாய்களுக்குப் பூட்டுப்போடுவோம். மூவின மக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்போம். சமரவுரிமையிலான தீர்வை வழங்கிவைப்போம் – என்றார்.

## ஜூன் நடுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் தாக்குதல் தற்போது ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கவுள்ளன.

பொதுத் தேர்தலை அடுத்து நடத்துவதே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். ஜூன் மாதம் நடுப்பகுதியில் பொதுத்தேர்தல் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

பலமான அரசு தோற்றம் பெறவேண்டுமாயின் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யவேண்டும். ஆனால் தற்போது தேர்தல் முறைமையில் திருத்தம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான மக்கள் ஆதரவு அரசுக்கு கிடைக்கும். பொதுத் தேர்தலை பாதுகாப்பான முறையில் நடத்துவதே அரசாங்கத்தின் அடுத்த இலக்கு – என்றார்.

## நாய் சுட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில், சாந்த அந்தோனியார் வீதியில் வசிக்கும் ஓய்வு பெற்ற முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் கிளமன் பெர்னான்டோ சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனித உரிமை செயற்பாட்டாளரும் காணாமல்போனோர் குடும்ப அங்கத்தவர் ஒன்றியத்தின் தலைவருமான பிரிட்டோ பெர்னான்டோவின் வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்ட 'மெக்ஸ்' என்ற நாயே சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், நீர்கொழும்பு பதில் நீதவான் பிரிமால் அமரசிங்க முன்னிலையில் ஆஜர் படுததப்பட்டபோது, ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப்பிணையில் செல்வதற்கு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணை இம்மாதம் 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்குவேளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை பணியில் இணைந்து கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி மீண்டும் ஊரடங்கில் தளர்வு ஏற்படுத்தப்படும் போது இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் சாதாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அரச தரப்பு அறிவித்துள்ளது.

இந்தச் சூழலில் திடீர் அறிவிப்பு தமக்கு அதிர்ச்சி அளிப்பதாக அந்த நிறுவன ஊழியர்கள் கவலை தெரிவித்துள் ளனர். தமது வீடுகளில் இருந்து தமது பணியிடங்களுக்குச் செல்கின்ற போது போக்குவரத்து வசதிகள் மற்றும் அனுமதிகள், நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை கொரோனா அச்சுறுத்தல் நீங்காத நிலையில் நூற்றுக் கணக்கானவர்கள் ஒரே இடத்தில் கூடுகின்றபோது அந்த நோய்த்தாக்கத்துக்கு உள்ளானவர்கள் யாராவது ஒரு சிலர் இருந்தால் கூட அனைவருக்கும் பரவும் அபாயம் இன்னமும் நீங்கவில்லை என்பதாலும் இந்த அறிவிப்பு தம்மையும் தமது குடும்பத்தையும் கவலையடைய வைத்திருக்கின்றது என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஹலோட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களில் பெருமளவானவர்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்று ஏற்பட்டுள்ள தாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 804 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை, கொரோனா தொற்றில் இருந்து 232 பேர் பூரணமாக குணமடைந்துள்ளமையுடன், 563பேர் வைத்திய சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

மேலும், இலங்கையில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 9 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 823 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இதுவரை கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 823 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் இலங்கையில் இதுவரையில் 09 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் பெண் திடீர் மரணம் அடக்கதுக்குத் தடை விதிப்பு

## வெலிகம பகுதியில் சம்பவம்

மாத்தறை – வெலிகம புதிய வீதியில் வசித்த முஸ்லிம் பெண் ஒருவர் நேற்றுக் காலை திடீரென மரணித்தமையையடுத்து அவரது உடலை அடக்கம் செய்ய பொலிஸார் தடை விதித்துள்ள சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

54 வயதுடைய இந்தப் பெண் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், நேற்றுக்காலை தனியார் வைத்தியசாலைக்கு அவரது மகனால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

அரச வைத்தியசாலையில் அனுமதிக்கும் படி தனியார் வைத்தியசாலை நிர்வாகம் அறிவுறுத்தியதை அடுத்து, மீண்டும் வீடுதிரும்பிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவர் மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவரது உடலை அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டபோது குறுக்கீடு செய்த வெலிகம பொலிஸார், உடலை மரண விசாரணைக்காக மாத்தறை அரசவைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் சற்று அச்ச உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொழயல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொழயல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# தொற்றைக் கட்டுப்படுத்தும் அரசின் முயற்சி தோல்வியில்!

## விஜித் விஜயமுனி சொய்சா சாட்டை

**கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதில் தோல்வியடைந்த அரசு, நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையையும் மறைக்க முயற்சிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

**எவ்வாறெனினும் உண்மை வெளியாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், தேர்தலை இலக்காக கொண்டு விமான நிலையங்களை மூடுவதற்கும் பரிசோதனைகளை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் தயக்கம் காட்டியதாக நேற்று கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் வைத்து அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

முதலாவது நோயாளர் மார்ச் மாதம் 10ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார். இன்றுடன் 53 நாட்கள். 28 ஆயிரத்து 728 பிசிஆர் பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு 505 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏப்ரல் 23ஆம் திகதியே பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டன. அந்த சந்தர்பத்தில் 363 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

ஆரம்பத்திலேயே நாம் பரிசோதனைகளை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்தோம். விமான நிலையங்களை மூடுமாறு அறிவுறுத்தினோம். தேர்ல் காரணமாக அதனை அவர்கள் செய்யவில்லை. முதலாவது நோயாளர் குணமடைந்ததும் இவர்கள் அதனை வைத்து திரைப்படத்தை உருவாக்கினார்கள். அதனைக் கொண்டு இந்த நாட்டில் எந்த பிரச்சினையும் இல்லை, பாதுகாப்பான நாடு, அனைவரும் வாருங்கள் என அழைப்பு வேறு விடுத்தனர்.

எவ்வித முன்னேற்பாட்டையும் செய்யவில்லை. சீனா தொடர்பில் மாத்திரமே நாம் அவதானம் செலுத்தினோம். இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் தொடர்பில் சிந்திக்கவில்லை. சுகாதார அதிகாரிகளின் கருத்துகள் கவனத்திற்கொள்ளப்படவில்லை. இந்த நாட்டிற்குள் நுழையக்கூடிய ஒரே வழியான விமான நிலையத்தை நாம் மூடவில்லை.

ரின் மீன் பருப்பு விலையை குறைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். அது கிடைக்கின்றதா? எரிபொருள் விலை குறைக்கப்பட்டதா? மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை. மக்கள் அதிகமாக வாழும் கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்த முடியாத அரசு தேர்தலை நடத்துவது தொடர்பில் சிந்திக்கின்றது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை மறைக்க முயன்றது. ஏழாகவே வைத்துக்கொள்ள அரசு முயற்சித்தது. எனினும் உண்மை வெளியாகியுள்ளது.

நாட்டு நிலைமையை கருத்திற் கொண்டு நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும். 52 நாள்கள் சூழ்ச்சியை முறியடித்து அரசாங்கத்தை வீழ்த்தியது போன்று தற்போது செயற்படுவது எமது நோக்கமல்ல.

இன்று அரசமைப்பு சர்ச்சைகள், குழப்பங்கள் காணப்படுகின்றன. அதாவது ஒரு விடயம் தொடர்பில் பல கருத்துகள் வெளியாகின்றமையே குழப்பத்திற்கு காரணம். கொரோனா அச்சுறுத்தலுடன் இணைந்ததாக



தேர்தல் ஒத்திவைக்கப்படுகின்றமையே இதற்குக் காரணம். 69 இலட்சம் வாக்குகளால் வெற்றிபெற்ற ஜனாதிபதி தன்னுடைய ஆரம்ப காலகட்டத்தையே கழிக்கின்றார்.

அதாவது இது குழந்தைப் பருவம். முன்னைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபொழுது இடைக்கால கணக்கறிக்கை ஊடாக கடந்த மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு நாம் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டிருந்தோம். எனினும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல் ஒன்று நடைபெறும் வரையிலான நிதி ஒதுக்கீடு இன்று பிரச்சினையாகியுள்ளது.

நிதி ஒதுக்கீடு செய்வதற்கான முழு அதிகாரமும் நாடாளுமன்றத்திற்கே காணப்படுகின்றது. எனினும் புதிய நாடாளுமன்றம் ஒன்று அமையப்பெற்று புதிய வரவு செலவுத்திட்டம் சார்ப்பிக்கப்படும் வரையில் மூன்று மாதங்களுக்கு நிதி ஒதுக்கீட்டினை செய்வதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு. எனினும் இவ்வாறான ஒரு சந்தர்ப்பமே குழப்பத்திற்கு காரணம்.

அரசியல் யாப்பினை நாம் அனைவரும் மதிக்க வேண்டும். அதற்காகவே நாம் பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கேட்கின்றோம். நாட்டு நிலைமையை கருத்திற் கொண்டு நாடாளுமன்றத்தை கூட்டுமாறு கேட்கின்றோம்.

இதனை செய்வதும் செய்யாமல் விடுவதும் அவரது விருப்பம். எனினும் நாட்டு மக்களின் நலன் கருதியே இந்த விடயத்தை நாம் வலியுறுத்துகின்றோம். நாடாளுமன்றத்தைக் கூட்டினார் என்பதற்காக 52 நாள்கள் அரசை வீழ்த்தியது போல இந்த அரசாங்கத்தை வீழ்த்துவது எமது நோக்கமல்ல. அது எமக்கு அவசியமும் இல்லை. – எனவும் தெரிவித்துள்ளார்.

# பதின்ம வயதுச் சிறுமிகள் நால்வர் பராமரிப்பு இல்லத்திலிருந்து மாயம்

## பொலன்னறுவைப் பகுதியில் சம்பவம்

பொலன்னறுவை, மே.08

சிறுவர் பராமரிப்பு இல்லத்திலிருந்து பதின்ம வயதுச் சிறுமிகள் நால்வர் திடீரென காணாமல் போயுள்ளமை பற்றிய செய்தி பொலன்னறுவையில் பதிவாகியுள்ளது.

பொலன்னறுவை - ஹிங்குரக் கொட பிரதேசத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் இருந்த 14,15,16 வயதுகளைக் கொண்ட 4 சிறுமிகள் இவ்வாறு திடீரெனக்காணாமல் போயுள்ளனர் என்று ஹிங்குரக்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஓசான் ஹேவாவித்தாரணவின் ஆலோசனையில் விசேட குழு அமைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# வீதி அபிவிருத்திக்கு சீனாவிடமிருந்து ரூபா 1,500 கோடி கடன் பெற முடிவு!

105 கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்ய ரூபா ஆயிரத்து ஐந்நூறு கோடி கடனை சீனாவிடமிருந்து பெறவுள்ளது இலங்கை அரசாங்கம்.

சீன அபிவிருத்தி வங்கியிலிருந்து இந்த கடனை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பாக வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் பேசிய அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தகவல் வெளியிட்டார்.

இலங்கையில் வேறுபட்ட பிரதேசங்களில் உள்ள 10 வீதிகளை அபிவிருத்தி செய்யவே இந்தக் கடனைப் பெறவுள்ளதாகவும் இதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நமது பார்வை



உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆட்சித் தரப்புக்கு வந்துள்ள அழுத்தம்

**'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' என்பார்கள். இரண்டுக்கும் ஒரே சமயத்தில் நீங்கள் ஆசைப்பட முடியாது.**

**அது போன்ற ஓர் இக்கட்டில் இப்போது மாட்டியிருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்று எண்ணத் தோன்றுகின்றது.**

**அவர் விரித்த அரசியல் திட்ட வலையைக் கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் சுனாமிப் பேரலை போல அள்ளிக் கொண்டு போய்விட்டது.**

**ஜனாதிபதித் தேர்தலோடு கிடைத்த பெரு வெற்றியை – பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிளவோடு சேர்த்து வசமாகப் பயன்படுத்தி – நாடாளுமன்றப் பலத்தையும் சுருட்டி வாரி அள்ள அவர் திட்டமிட்டு வியூகம் வகுத்தார்.**

**அவர் கணக்கிட்டபடி – வகுத்த திட்டப்படி – எல்லாம் கனகச்சிதமாக நிறைவேறியிருந்தால், இன்று நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மொட்டுக் கட்சி ஆட்சிப் பீடம் ஏறியிருக்கும்.**

**அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்தை நீக்கி, ஜனாதிபதி கோட்டாபயவின் அதிகாரத்தை மீண்டும் வலிமை பெறச் செய்வதற்கான அரசமைப்புத் திருத்த நகலுக்கான ஆரவாரத் தயாரிப்புகள் ஆரம்பமாகியிருக்கும்.**

**நாட்டு மக்களுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியமை மட்டுமல்லாமல் ஜனாதிபதியின் திட்டத்திலும் மண் அள்ளிப் போட்டுவிட்டது கொரோனா.**

**கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் இடத்துக்குப் புதிய நாடாளுமன்றம் மூன்று மாதத்தில் மீண்டும் செயற்படுவது சாத்தியமில்லை என்பதால், அதனடிப்படையில் நாடாளுமன்றத்தைக் கலைத்த உத்தரவை விலக்கி, பழைய நாடாளுமன்றத்தை மீள இயங்க அழையுங்கள் – அனுமதியுங்கள் – என்று எதிரணிகள் ஜனாதிபதியை வற்புறுத்துகின்றன.**

**இதற்காக அவை உயர்நீதிமன்றுக்கும் சென்றுள்ளன. இது தொடர்பில் பத்துக்கு மேற்பட்ட மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கலாகியுள்ளன என்று கூறப்படுகின்றது.**

**மீளக் கூட்டுங்கள் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்குத் தாம் செவி சாய்க்கப் போவதில்லை என்பதில் தாம் மிக உறுதியாக இருக்கின்றார் என்று காட்டுவது போல அவர் பிரதிபலிப்புகளை விடுத்து வருகின்றார். கலைத்த நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கான அதிகாரம் தமக்குக் கிடையாது என்றும் கூட சொல்லியுள்ளார்.**

**அதேபோன்று, கலைத்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீளக் கூட்டவே மாட்டார் என்று காபந்துப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அறிவித்து வந்துள்ளார்.**

**ஆனால் அவர்கள் இருவரின் இந்த விடாப்பிடி நிலைக்கு ஆப்பு வைப்பது போன்று களநிலை யதார்த்தம் உருவாகி வருவதாகத் தெரிகின்றது.**

**ஒரு புறம் எதிர்க்கட்சியின் கோரிக்கையை ஏற்று பொதுத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு எதையும் விதிப்பதோடு, கலைத்த்த நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு ஜனாதிபதிக்குப் பரிந்துரை எதையும் வழங்கிவிடலாம் என்று சட்ட வல்லுநர்கள் எதிர்வு கூறுகின்றனர்.**

**அதைத் தவிர்ப்பதற்காக நீதிமன்றம் தலையிட்டு உத்தரவு கொடுக்க முன்னர், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட காரணத்தைக் கையாள்வதற்காக என்ற பெயரில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கண்துடைப்புக்கேனும் ஒரு தடவை கூட்டி, ஓரிரு அமர்வுகளோடு அதனை முடிவுக்குக் கொண்டு வந்தால் என்ன என்று ஓர் ஆலோசனை சட்டவிற்பன்னர்களால் அரசுத் தலைமைக்கு வழங்கப்பட்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. இதன்மூலம் நீதிமன்றத் தலையீட்டைத் தவிர்க்க முடியுமா என்று ஆராயப்படுகின்றதாம்.**

**மறுபுறம் அதை விட ஒரு விவகாரம் அரசுத் தலைமைக்கு நெருக்கடியாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**கொரோனாத் தொற்றால் நாடு இரண்டு மாதங்கள் ஸ்தம்பித்துப் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருகின்றது.**

**இதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடம் கடனுதவி கோரியிருக்கின்றது இலங்கை அரசு.**

**தவிரவும், ஏற்கனவே நாடு வாங்கிய கடன் தொகைக்கான நிலுவைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் புதிய கடனை அரசு எதிர்பார்க்கின்றது.**

**இதற்கான உதவிகளைச் செய்வதற்கு – கடன் திட்டங்களை அங்கீகரிப்பதற்கு – தனியாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி தரப்பு மட்டும் போதாது, ஜனநாயக ரீதியான – வெளிப்படைத் தன்மையுடடைய – ஏற்றுக்கொள்ளத் தக்க – அரசுக் கட்டமைப்பு அவசியம் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளினால் அரசுத் தலைமைக்கு அறிவுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.**

**உதவும் தரப்புகளின் கண்களைக் கழுவுவதற்காகவேனும், நாடாளுமன்றக் செயற்பாட்டை கண்கட்டு வித்தையாகத் தன்னும் நடத்திக் காட்ட வேண்டிய கட்டாயம் கோட்டா தரப்புக்கு வந்திருக்கின்றது எனத் தெரிகின்றது. பார்ப்போம் இந்த அரசு நிர்வாகம் என்ன செய்யப்போகின்றது என்பதை.**

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்திக்கொள்ளாது தொடர்ந்தும் முன்னெடுப்போம் எனவும் அவர் கூறினார்.

ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தல் சம்பந்தமாக அரசாங்கம் மற்றும் சுகாதார அதிகாரிகள் இடையில் கலந்துரையாடப்பட்டு வரும் நிலையில் அது குறித்தும், தற்போதைய நிலைவரம் குறித்தும் கருத்து தெரிவிக்கும்போதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் ஆரோக்கியமான மட்டத்தை அடைந்துள்ளன.

நாடு இன்று ஆரோக்கியமான நிலையில் உள்ளது என்பது உறுதிப்படுத்தக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறான நிலையை அடைய நாம் கடுமையாக கடந்த காலங்களில் போராட வேண்டியிருந்தது. ஏனைய நாடுகள் இன்றுவரை கொவிட் –19 தொற்றுநோய் தாக்கத்திற்கு உள்ளாகி அதிலிருந்து மீள்வதில் கடும் சிரமங்களை அனுபவித்து வரும் நிலையிலும் நாம் வெகு விரைவில் இந்த நெருக்கடியைச் சமாளித்து மக்களை பாதுகாத்துள்ளோம்.

குறிப்பாக மக்களிடம் வைரஸ் நெருங்காத வகையில் தடுப்பு சுவர் ஒன்றினை உருவாக்கியுள்ளோம். வைரஸ் சமூகப் பரவலாக மாற முன்னர் அதனை எம்மால் தடுக்க முடிந்துள்ளது.

வேறு எந்த நாடுகளும் செய்யாத விடயத்தை நாம் செய்துள்ளோம் என்றால் அதற்கு எமது சுகாதார சேவையின் தரமும், அதிகாரிகள் மற்றும் மக்களின் ஈடுபாடுமே காரணமாகும்.

வைரஸ் தொற்றுநோய் பரவ ஆரம்பித்த காலம் தொடக்கம் அரசு விதித்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் மக்கள் முறையாகப் பின்பற்றி சுகாதார அறிவுரைகளைக் கையாண்ட காரணத்தினால் மக்களே தம்மை பாதுகாத்துக்கொண்டுள்ளனர் என்றே நாம் கூறுவோம்.

எமது நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும் மக்களின் அர்ப்பணிப்பும் பொறுமையும், புத்திசாலித்தனமுமே பிரதானமாகும். இப்போது வரை நாம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளாது தொடர்ந்தும் சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

வைரஸ் தொற்றுக்கள் மக்களை நெருங்காத வகையில் விசேட வேலைத்திட்டங்களைக் கையாள வேண்டும். அதற்கான புதிய வேலைத் திட்டங்களை நாம் உருவாக்கியுள்ளோம். இது வரை காலமாக 30 ஆயிரம் பி.சிஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை நாம் முன்னெடுத்த பரிசோதனைகளில் 3 வீதமான தொற்றுநோயாளர்களே கண்டறியப்பட்டுள்ளனர். ஆகவே இது ஆரோக்கியமான விடயமாகும். இந்நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஊரடங்கை தளர்த்துவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

பெரும்பாலும் ஊரடங்கு தளர்த்தப்படும். இந்நிலையில் மக்கள் மிகவும் அவதானமாக சுகாதார அறிவுரைகளைப் பின்பற்றி செயற்படவேண்டும். நாம் வைரஸ் தொற்றை கட்டுபடுத்தி வைத்துள்ளோமே தவிர நாட்டிலிருந்து முற்றாக வைரஸ் தொற்றுநோய் நீக்கப்படவில்லை என்பதை சகலரும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இன்னமும் இது குறித்த விசேட கண்காணிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். மருத்துவப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும், பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறும். ஆகவே நோய்த் தாக்கங்கள் எதுவாக இருப்பினும் மக்கள் தமக்கான பரிசோதனைகளை செய்தாக வேண்டும். அதுவே சமூகத்தைப் பாதுகாக்க சிறந்த வழிமுறையாக அமையும். அதேபோல் அரசு பல கட்டுப்பாடுகளுடன் இந்த ஊரடங்கை தளர்த்துகின்றது. அவ்வாறு இருக்கையில் மக்கள் அவை அனைத்தையும் கண்டிப்பாகப் பின்பற்றியாக வேண்டும். – என்றார்.

---

## விக்னேஸ்வரனிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வெளியிட்ட மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கொழும்பு வாழ்க்கை, மேட்டுக்குடிப் பின்னணி, தமிழ்மக்களுக்கு நன்றாக அறிமுகமான முகம், போதாக்குறைக்கு சிங்கள மண வுறவு போன்றவற்றை வைத்து தங்களைப்போல தமிழ்மக்களை ஏமாற்ற பெரிதும் பொருத்தமானவர் என நம்பிய சம்பந்தன் விக்னேஸவரனிடம் ஏமாந்தமை உண் மையே. ஆனால் தமிழ் மக்கள் விக்னேஸ்வரனிடம் ஏமாறவில்லை.

அவரும் தமிழ்மக்களை ஏமாற்றவில்லை.

சம்பந்தன் எதிர்பார்த்தமை போல தேர்தல்களில் குறிப்பாக மாகாணசபைத் தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அவர் கைவிடவில்லை.

ஒற்றையாட்சியை சமஷ்டி என்று கூறி மக்களை ஏமாற்றவில்லை.

இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றாது விடவில்லை.

பதவி, பணம், சுகபோகங்களுக்காக விலைபோகவில்லை.

சர்வதேசத்தில் இலங்கை அரசைப் பிணை எடுப்பதற்குத் துணை நிற்கவில்லை. கணக்கெதுவும் காட்டாத கட்சிக்காக வெளிநாட்டில் நிதி சேகரிக்கப் போகவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களின் திருகுதாளங்களை மறைப்பதற்குத் துணை போகவில்லை – என்பதனால் விக்னேஸ்வரனிடம் ஏமாந்தமை உண்மையே.

விக்னேஸ்வரன் தான் சொன்னதுக்கு மாறாக தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சியாக மாற்றவில்லை. பேரவை வேறு. தமிழ்மக்கள் கூட்டணி வேறு. இக் கட்சி கூட தமிழ்மக்களின் வேண்டுகோளைப் புறந்தள்ளமுடியாது உருவாக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களுக்கு நேர்மையாக இருந்திருந்தால் இக்கட்சி தோன்ற வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

மேலும் நல்லாடசியிடம் சம்பந்தன் ஏமாறவில்லை எனச் சுமந்திரன் சொல்வது உண்மையானால் ஏமாந்துவிட்டோம் எனத் தலைவர் உட்பட அவரது கட்சியினர் சொன்னது பொய்யா?

அவரது கட்சியினர் சொன்னது பொய்யானால் சுமந்திரனும் சம்பந்தனும் எமது மக்களை மட்டுமல்ல அவரது கடசி யினரையும் ஏமாற்றினர் என்பதே உண்மையாகும். – என்று உள்ளது.

---

## ஏழாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த முதலாம் திகதி அதிகாலை இடம்பெற்றது.

இரண்டு வீடுகளுக்குள் புகுந்த கும்பல் அங்குள்ளவர்களை தாக்கியும் அச்சுறுத்தியும் கொள்ளையில் ஈடுபட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு வீட்டில் 3 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணமும் மற்றொரு வீட்டில் 2 பவுண் எடையுடைய சங்கிலிகள் இரண்டும் கொள்ளையிடப்பட்டமையுடன் மூன்றாவது வீட்டில் சைக்கிள் திருடப்பட்டது.

முகமூடி அணிந்து வாள்களுடன் சென்ற நான்கு பேர் கொண்ட கும்பலே ஊரடங்கு வேளையில் இநந்த் துணிகரக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மற்றும் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் என இரண்டு பிரிவுகளாக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் பல வருடங்களாக கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஏழாலையைச் சேர்ந்த ஒருவர் (அடையாள அணிவகுப்பு இடம்பெறவுள்ளதால் பெயர் தவிர்க்கப்படுகிறது) மாவட்ட புலனாய்வுப் பிரவினரால் கைது செய்யப்பட்டார். அந்தச் சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேலும் மற்றொரு குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரும் இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கோப்பாய் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

அத்துடன், கொள்ளையிட்ட நகைகளை அடகு வைத்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேக நபரிடமிருந்து கோடாரி உள்ளிட்ட கூரிய ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் 5 பேரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர். சான்றுப்பொருள்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் 5 பேரும் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் கூறினர்.

# கொரோனாவுக்கு எதிரான போரில் அடுத்த கட்டத்தில் அமெரிக்கா!

## அதிபர் ட்ரம்ப் தெரிவிப்பு

கொரோனா வைரஸுக்கு எதிரான போரின் அடுத்த கட்டத்தில் அமெரிக்கா இருப்பதாக அதிபர் ட்ரம்ப் கூறினார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளானவர்கள் எண்ணிக்கை 12 லட்சத்தை கடந்து வேகமாக சென்று கொண்டிருக்கிறது. இதே போன்று உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 72 ஆயிரத்தை தாண்டி விட்டது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் செவ்வாய்க்கிழமை, என் - 95 முக கவசங்களை தயாரிக்கிற, பீனிக்சின் ஹனிவெல் இன்டர்நேனல் நிறுவனத்துக்கு சென்று பார்வையிட்டார். அங்கு அதன் பணியாளர்கள் மத்தியில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

அமெரிக்காவில் கொரோனாவின் பாதிப்பு குறைந்து வருகிறது. நாம் இப்போது கொரோனாவுக்கு எதிரான போரின் அடுத்த கட்டத்தில் உள்ளோம். இது மிகவும் பாதுகாப்பான கட்டம். அமெரிக்கா படிப்படியாக திறக்கப்படுகிறது. நமது மக்களின் ஆழமான அர்ப்பணிப்புக்கு நன்றி.

அமெரிக்கா கிட்டத்தட்ட 250 ஆண்டுகளுக்கு முன் விடுதலை பெற்றது. ஆனால் சமீபத்திய ஆண்டுகளில் நமது சுதந்திரத்தை வெளிநாட்டினருக்கு வழங்க அரசியல்வாதிகள் அனுமதித்தனர். ஆனால் நாங்கள் அதை திரும்ப எடுத்து வருகிறோம். நீங்கள் இப்போது வேலை வாய்ப்பு பெற்றுள்ள அமெரிக்கர்களின் எண்ணிக்கையை பாருங்கள். அது தெரியும்.

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் இது மிகப் பெரிய அணி திரட்டல் ஆகும். ஒரு கண்ணுக்குத் தெரியாத எதிரியை நம்புவது கடினம். ஆனால் அது ஒரு மோசமான எதிரி - என்றார் அவர்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான போரில், பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், நைஜீரியா



ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா உதவுவதாகவும் ட்ரம்ப் கூறினார்

# சொகுசு கார் வாங்க 3 டொலருடன் கார் ஓட்டிச் சென்ற 5 வயது சிறுவன்

## அதிர்ந்து போனது பொலிஸ்



அமெரிக்காவில் 5 வயது சிறுவன் சொகுசு கார் வாங்குவதற்காக, வெறும் 3 டொலருடன் தன் பெற்றோரின் காரை ஓட்டிச் சென்றபோது பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டான். .

அமெரிக்காவின் உட்டா மாநிலத்தில் உள்ள ஒரு நெடுஞ்சாலையில் பொலிஸார் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு ஒரு கார் மட்டும் சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் வேகமாக சென்றுகொண்டிருந்தது. இதனை கவனித்த பொலிஸார் தங்களது வாகனத்தில் விரட்டிச் சென்று அந்த காரை மறித்தனர்.

பின்னர் காரின் கதவை திறந்து பார்த்த பொலிஸாருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. காரை 5 வயது சிறுவன் தனியாக இயக்கி வந்தது தெரியவந்தது. இதையடுத்து பொலிஸார் அந்தச் சிறுவனிடம் இது யாருடைய கார்? காரை எடுத்துக் கொண்டு எங்கே தனியாக செல்கிறாய்? என்று கேட்டனர். அதற்கு சிறுவன் அளித்த பதிலை கேட்டு பொலிஸார் கிறுகிறுத்துப் போயினர்.

இந்த கார் தனது பெற்றோருடையது என்றும், தனக்காக விலை உயர்ந்த சொகுசு காரான லம்போர்கினி மாடல் காரை வாங்க கலிபோர்னியாவுக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் சிறுவன் கூறினான்.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பொலிஸார், அந்த சிறுவனிடம் நடத்திய சோதனையில் அவன் வெறும் 3 அமெரிக்க டொலர் மட்டுமே வைத்திருந்தது தெரியவந்தது. லம்போர்கினி மாடல் காரின் விலை 1 லட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டொலர்.

இதையடுத்து சிறுவனின் பெற்றோரை வரவழைத்த பொலிஸார் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, சிறுவனை வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

# 100 கோடி மாற்றுத் திறனாளிகள் கொரோனாவால் கடும் பாதிப்பு

## ஐ.நா. பொதுச் செயலாளர் அறிக்கை



கொரோனா வைரஸ் தொற்றால் உலகில் உள்ள 100 கோடி மாற்றுத் திறனாளிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) பொதுச்செயலாளர் ஆண்டனியோ குட்டரெஸ் வேதனையுடன் கூறி உள்ளார்.

கொரோனா வைரசால் ஏற்பட்டு வருகிற பாதிப்பு பற்றி ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் ஆண்டனியோ குட்டரெஸ் வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

கொரோனா வைரஸ் தொற்றுநோய் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக உலகில் உள்ள 100 கோடி மாற்றுத் திறனாளிகள் கடும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

உடல் ரீதியிலான குறைபாடு உள்ளவர்கள், ஏற்கனவே வறுமையில் வாழ்ந்து கொண்டிருக் கிற நிலையில், வன்முறைகள், புறக்கணிப்புகள், துன்புறுத்தல் போன்ற புதிய அச்சுறுத்தல்களையும் சந்தித்து வருகிறார்கள்.

கொரோனா வைரஸ் தொற்று, உடல் ரீதியில் குறைபாடு இருப்பவர்களை தாக்கினால், அவர் களது உடல்நிலை மிகவும் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அது இறப்பில் முடியவும் வாய்ப்பு இருக்கிறது.

பராமரிப்பு இல்லங்களில் வாழ்ந்து வருவோரில் வயதானவர்களும், உடல் குறைபாடுகள் உள்ள வர்களும் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அந்த வகையில் கொரோனா வைரஸ் பாதிப்பு இறப்புகளில் அவர்களது பங்களிப்பு 19 சதவீதத் தில் இருந்து ஆச்சரியப்படத்தக்க வகையில் 72 சதவீதம் வரையில் இருக்கிறது.

சில நாடுகளில் சுகாதார வசதிகளை மதிப்பிடுவது தொடர்பான முடிவுகள் பாரபட்சமான அளவுகோல்களை அடிப்படையாக கொண்டவை ஆகும். இதை நாம் தொடர அனுமதிக்க முடியாது.

உடல் ரீதியில் குறைபாடு உடையவர்களும், மற்ற மனிதர்களைப்போல சம உரிமைகள் பெறுவதற்கு நாம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவி வருகிற இந்தக் கால கட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கும் போதிய சுகாதார பராமரிப்பும், உயிர் காக்கும் நடைமுறைகளும் கிடைக்க வேண்டும். - இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

# கொரோனா வைரஸ் நோய் பரவலால் ஆபத்தில் அமேசான் பழங்குடிகள்!

கொரோனாவின் கோரத் தாண்டவத்தால் பிரேஸிலின் அமேசான் காடுகளில் வாழும் உலகம் தெரியாத அப்பாவி பழங்குடியின மக்களுக்கும் ஆபத்து அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

21ஆம் நூற்றாண்டில் மனித குலத்துக்கு மாபெரும்சவாலாக உருவெடுத்திருப்பது, கொரோனா வைரஸ். இதன் ஆக்டோபஸ் கரத்தால் தீண்டப்பட்டு உலக மக்கள் வாழ்வா, சாவா? போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இத்தகைய மோசமான சூழலில், கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் அமேசான் காடுகளில் வாழும் உலகம் தெரியாத அப்பாவி பழங்குடியின மக்களுக்கும் ஆபத்து அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் பெரும்பாலான பகுதிகளில்தான் உலகின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசான் மழைக்காடுகள் உள்ளன.

பசுமை போர்த்தி காட்சியளிக்கும் இந்தக் காடுகளில் 300க்கும் மேற்பட்ட பழங்குடியினத்தை சார்ந்த லட்சக் கணக்கான மக்கள் வசித்து வருகின்றனர்.



இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளி உலகத்தோடு இன்னும் தொடர்புக்கே வராதவர்கள். பழமை சிறிதும் குன்றாமல் குடிசை அமைத்து தற்சார்பு வாழ்க்கை வாழ்ந்து வருபவர்கள்.

இருப்பினும் கொரோனா வைரசின் கொடிய பார்வை இவர்கள் பக்கமும் திரும்பி உள்ளது. பழமை மாறா பழங்குடியின மக்களும் கொரோனாவால் பாதிக்கப்பட்டும், உயிரிழந்தும் வருகின்றனர்.

வெளி உலகத்தோடு சிறிதும் பிணைப்பற்ற இவர்களும் வைரஸ் தாக்குதலால் பாதிப்படைவதற்கு யார் காரணம் என்று கேட்டால், நம்மைப் போன்ற நவீன யுக மக்களே!. அமேசான் காடுகளில் மரம் வெட்டுதல், வேட்டையாடுதல், சுரங்கத் தொழில் உள்ளிட்ட பல சட்ட விரோத பணிகள் காலம் காலமாக நடந்து வருகின்றன.

இத்தகைய பணிகளில் ஈடுபடும் வெளியாட்கள் மூலம் பழங்குடியினருக்கு இறக்குமதி செய்யப்படும் கொரோனா, அப்பாவி பழங்குடிகளை பாதித்து வருகிறது. கடந்த ஆண்டு அமேசான் காடுகளில் ஏற்பட்ட கட்டுக்கடங்காத காட்டுத் தீ, பழங்குடியின மக்களுக்கு கடுமையான பாதிப்பை விளைவித்தது.

அந்த ரணமே இன்னும் ஆறாத நிலையில், புதிதாக பரவி வரும் இந்த நோய்த் தொற்று பூர்வீக பழங்குடியினரின் வாழ்க்கையை பெரிதும் கேள்விக்குறியாக்கி உள்ளது.

# ஒன்றிணைந்து போராட வாருங்கள் இந்தியப் பிரதமர் மோடி அழைப்பு



கொரோனா வைரஸை அழிக்க அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று புத்த பூர்ணிமா விழாவில் நேற்றுப் பேசிய இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார்.

புத்த பூர்ணிமா விழாவையொட்டி பிரதமர் மோடி நேற்றுக் காலை நாட்டு மக்களுக்கு காணொலி மூலம் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது;-

கொரோனா வைரஸை தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோருக்கு தலைவணங்குகிறேன். இந்த அவநம்பிக்கையான காலங்களில் உங்கள் ஒத்துழைப்புக்காக நான் உங்களை பாராட்டுகிறேன். கொரோனாவால் பாதிக்கப்பட்டோர், அதை எதிர்த்து போராடுபவர்களைக் கவுரவப்படுத்த விழா நடத்தப்படுகிறது.

உலகம் ஒரு கடினமான கட்டத்தை கடந்து செல்கிறது. இந்த நேரத்தில் கொரோனா வைரஸை அழிக்க அனைவரும் ஒன்று இணைந்து போராட வேண்டும். கொரோனாவுக்கு எதிரான எங்கள் போராட்டத்தில் உறுதியாக இருக்கிறோம்.

நாட்டிலோ அல்லது வெளி நாட்டிலோ பிரச்சினையை எதிர் கொள்பவர்களுடன் இந்த கடினமான காலங்களில் இந்தியா தன்னலமின்றி வலுவாகத் துணை நிற்கிறது.

இந்தியாவின் வளர்ச்சி எப்போதும் உலக வளர்ச்சிக்கு உதவும்.

இவ்வாறு மோடி பேசியுள்ளார்.

# விஷ வாயு தாக்கி இறந்தோரின் குடும்பங்களுக்கு ரூ.2.3 கோடி

## ஆந்திர மாநில அரசு அறிவிப்பு

விசாகப்பட்டினம் இரசாயன ஆலையில் வாயுக் கசிவினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு



தலா 2.3 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் எனமுதல்வர்ஜெகன்மோகன்ரெட்டிஅறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே உள்ள ஆர்.ஆர்.வெங்கடபுரம் கிராமத்தில் எல்ஜி பாலிமர்ஸ் என்ற இரசாயன தொழிற்சாலை உள்ளது. இந்த ஆலையில் இருந்து நேற்று அதிகாலை இரசாயன வாயு கசிந்து விச வாயு வெளியேறி உள்ளது.

அதிக அழுத்தத்துடன் வெளியேறிய வாயு, ஆலைக்கு வெளியே பல மீட்டர் தொலைவுக்கு பரவியது. காற்றில் கலந்த இரசாயன வாயுவால் மூச்சுவிட முடியாமல் மக்கள் தவித்தனர். பலருக்கு கண் எரிச்சல், மூச்சுத்திணறல் ஏற்பட்டு, மயங்கி விழுந்தனர்.

இந்த விபத்து குறித்து கேள்விப்பட்ட முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, விசாகப்பட்டினம் கிங் ஜார்ஜ் மருத்துவமனைக்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களின் உடல் நிலை மற்றும் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த ஜெகன் மோகன் ரெட்டி, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2.3 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்தார். சிகிச்சை பெறுவோருக்கு 10 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அரசு உதவி செய்யும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

வாயு கசிவு ஏற்பட்ட இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வீடுகளில் இருக்கும் மக்கள் ஈரத்துணியால் முகத்தை மறைத்து கட்டிக்கொள்ள வேண்டும், நன்றாக தண்ணீர் குடிக்க வேண்டும், கண் எரிச்சல் ஏற்பட்டால் கண்களை நன்றாக தண்ணீரால் கழுவ வேண்டும், தோலில் அரிப்பு ஏற்பட்டால் சோப்பு போட்டு கழுவ வேண்டும், உடல்நிலையில் வேறு மாற்றம் ஏற்பட்டு அசவுகரியமாக உணர்ந்தால் உடனடியாக 108 ஐ தொடர்பு கொள்ள வேண்டும் என காவல்துறை அறிவுறுத்தி உள்ளது.

# 80 ஆயிரம் பேர் குஜராத்தைவிட்டு தத்தம் மாகாணங்களுக்கு திரும்பினர்

குஜராத்தில் சிக்கித் தவித்த 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த மாநிலங்களைச் சென்றடைந்தனர்.

ரயில் மூலம் சொந்த மாநிலம் புறப்படும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஊரடங்கு உத்தரவால் ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு வேலைக்காக சென்ற புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சொந்த மாநிலம் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது.

தங்களைசொந்தமாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்பதை வலியுறுத்தி அடிக்கடி பொது இடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட தொடங்கினர். இதனால் கடந்த முதலாம் இருந்து தொழிலாளர்களை சொந்த மாநிலத்திற்கு அனுப்பலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளுக்கு அனுமதி அளித்தது. அதன்படி ஒவ்வொரு மாநில அரசுகளும் வெளி மாநிலத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை தங்களது மாநிலத்திற்கு அழைத்த வண்ணம் உள்ளன.

குஜராத் மாநில முதல்வர் அலுவலகத்தின் செயலாளர் அஷ்வனி குமார் இதுகுறித்து கூறுகையில் “உத்தர பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த 80 ஆயிரத்து 408 தொழிலாளர்கள் அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு 67 சிறப்பு ரெயில்கள் மூலம் கடந்த மே 2ஆம் திகதியில் இருந்து இரவு வரை அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இன்று மேலும் 34ரயில்கள் மூலம் குஜராத்திலிருந்து உத்தர பிரதேசம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மாநிலத்திற்கு அனுப்பி வைக்க இருக்கிறோம். இதில் 20 ரயில்கள் உத்தர பிரதேசத்திற்கும், ஐந்து ரெயில்கள் ஒடிசாவுக்கும், நான்கு ரெயில்கள் பீகாருக்கும், தலா இரண்டு ரயில்கள் ஜார்க்கண்ட் மற்றும் மத்திய பிரதேசத்திற்கும், ஒரு ரெயில் சத்தீஸ்கர் மாநிலத்திற்கும் இயக்கப்பட இருக்கின்றன.

இந்த ரயில்கள் முக்கிய நகரங்களான அகமதாபாத், சூரத், பரூச், மெசானா, நிதியாட், ஜாம்நகர், வதோதரா, பலன்பூரில் இருந்து இன்றிரவு புறப்படுகின்றன.

நாங்கள் மற்ற மாநிலங்களில் சிக்கியுள்ள குஜராத் வாசிகளுக்கும் உதவி செய்து வருகின்றோம். தற்போது வரை 29 ஆயிரத்து 540 பேர் (மாணவர்கள், தொழிலதிபர்கள் உள்பட பலர்) மற்ற மாநிலங்களில் இருந்து குஜராத்திற்கு வந்தடைந்துள்ளனர்” என்றார்.

# மருத்துவர்கள், தாதியர்கள் 548 பேருக்கும் கூட தொற்று

இந்தியாவில் 548 மருத்துவர்களுக்கும், தாதியர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

கொரோனா வைரஸ் என்ற கொலைகார வைரஸ் நாடு முழுவதும் தொடர்ந்து பரவி வருகிறது. நாளுக்கு நாள் இதன் தாக்கம் அதிகரித்த வண்ணமாக இருக்கிறது.

ஏறத்தாழ 53 ஆயிரம் பேரை இந்த வைரஸ் இந்தியாவில் இதுவரை தாக்கி உள்ளது.

அவர்களைக் காப்பாற்றுவதற்காக மருத்துவர்கள், தாதிகள், மருத்துவ சார்பு பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் தங்கள் உயிரைப்பணயம் வைத்து இரவு, பகல் பாராமல் போராடி வருகிறார்கள்.

இந்த உயிர் காக்கும் களப்பணியில் அவர்களும் பாதிப்புக்கு ஆளாவது தொடர்கதை ஆகி வருகிறது. இது மருத்துவ பணியாளர்களிடையே மிகுந்த கவலையையும், வேதனையையும் ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும் அவர்கள் தங்கள் பணியை தொடர்கின்றனர்.

இதுவரை இந்தியாவில் 548 மருத்துவர்கள், நர்சுகள், மருத்துவ சார்பு பணியாளர்கள், சுகாதாரப்பணியாளர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளாகி உள்ளதாக மத்திய அரசு தகவல்கள் கூறுகின்றன.

இவர்கள் நாடு முழுவதும் உள்ள மத்திய, மாநில அரசு, யூனியன் பிரதேச பணியில் உள்ளவர்கள் ஆவார்கள்.

தலைநகர் டெல்லியில் மட்டுமே கொரோனா வைரஸ் தொற்று, 69 மருத்துவர்களை பாதித்து இருக்கிறது.

தாதிகளை, மருத்துவ சார்பு பணியாளர்களை பொறுத்தமட்டில் 274 பேர் இந்த வைரஸின் தாக்குதலுக்கு ஆளாகி இருப்பதாக தெரியவந்துள்ளது.

மத்திய அரசு சார்பில் நடத்தப்படுகிற டெல்லி சப்தர்ஜங் ஆஸ்பத்திரியில் 7 உறைவிட மருத்துவர்கள், ஒரு பேராசிரியர் உள்பட 13 மருத்துவ பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

# தந்தை மது அருந்தியதைப் பார்த்த மகள் மனமுடைந்து தீக் குளிப்பு!



தமிழ்நாடு மதுரை அலங்காநல்லூர் அருகே தந்தை மது அருந்தி வீட்டுக்கு வந்ததால் மனமுடைந்த மகள் தீக்குளித்தார். காப்பாற்ற சென்ற தாயும் படுகாயம் அடைந்தார்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில், ஊரடங்கு தளர்த்தப்பட்டு சென்னை தவிர பிற பகுதிகளில் அரசு மதுபான நிலையங்களான டாஸ்மாக் கடைகள் இன்று திறக்கப்பட்டுள்ளன.

நோய்த்தொற்று அதிகம் உள்ள பகுதிகள், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளை தவிர மற்ற இடங்களில் கட்டுப்பாடுகளுடன் டாஸ்மாக் கடைகளில் விற்பனை நடைபெறுகிறது.

44 நாட்களுக்கு பிறகு டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டதால் மது பிரியர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். கைத்தட்டும் விசிலடித்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இது ஒருபுறமிருக்க, சில இடங்களில் டாஸ்மாக் கடைகளை திறக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். குறிப்பாக பெண்கள் மத்தியில் டாஸ்மாக் திறப்புக்கு எதிர்ப்பு கிளம்பி உள்ளது. மதுரை மாவட்டம் பைகாரா பகுதியில் டாஸ்டாக் கடைகளை திறக்க எதிர்ப்பு தெரிவித்து பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மதுரை அலங்காநல்லூர் அருகே கட்ட தொழிலாளியான சிவகுமரன் என்பவர் நேற்று டாஸ்மாக் கடையில் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்தார். தந்தை மது அருந்திவிட்டு வந்ததை கண்ட மகள் அர்ச்சனா மனமுடைந்து தீக்குளித்தார். மகள் அர்ச்சனாவை காப்பாற்றச் சென்ற தாய் பரமேஸ்வரியும் தீயில் சிக்கி படுகாயமடைந்தார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இன்று மே 8. உலக செஞ்சிலுவைச் சங்க தினம். அதையொட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

# மகத்தான சேவையாற்றும் மனிதாபிமான அமைப்பு

# செஞ்சிலுவை சங்கம்



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்
சமூகவியல் துறை, மூன்றாம் வருடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

இன்று உலக செஞ்சிலுவை சங்க தினமாகும்.


இவ்வுலகத்தில் உயிரைவிட பெரிய விடயம் ஒன்றுமில்லை என்று கூறலாம். அவ்வாறான உயிரை காக்கின்ற மகத்தான மற்றும் வரவேற்கத்தக்க சேவையாற்றும் ஓர் அமைப்பாக செஞ்சிலுவை சங்கம் இவ் உலகிற்கு ஒளியாக விளங்குகின்றது.

நாம் வாழுகின்ற சமூகத்தினை பார்க்கும் போது ஒவ்வொரு மனிதனிடமும் நாடு, இனம், மொழி, பால், மதம், ஜாதி, நிறம் என பலவாறான வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இவ்வாறு பல வேறுபாடுகளுக்குள் உயிர் என்பது அனைவருக்கும் சமமாகும். அப்படிப்பட்ட உயிர்களைக் காக்க உருவாக்கப்பட்ட இயக்கமே செஞ்சிலுவை சங்கமாகும். ஒரு நாடு இன்னொரு நாடுடன் போர் செய்யும் போது அதில் ஏற்படும் இழப்புகளை மீட்க வேண்டும். முதலில் உயிர்களை மீட்டால் தான் அவர்களுக்கு தேவையான உடமைகளை தர முடியும். அந்த சேவை மனப்பான்மையை அடிப்டையாக கொண்ட அமைப்பு இவ் அமைப்பு காணப்படுகின்றது. இற்றைக்கு 156 ஆண்டுகளைக் கடந்து மக்களுக்கு தமது பணியினை செய்து கொண்டு வருகின்றது.

இவ் அமைப்பு எவ்வாறு தோன்றியது?

1828 ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி சுவிட்சர்லாந்து நாட்டில் ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்தவர் ஜீன் ஹென்றி டுனாண்ட்.

இவர் கல்வியிலும் சிறந்து விளங்கியவராகவும் காணப்பட்டார். முதலில் ஜெனிவா வங்கியில்



வேலை செய்தார். அந்த வேலை அவருக்கு மன நிறைவைத் தரவில்லை என்ற காரணத்தினால் விவசாயம் செய்யலாம் என்று முடிவு எடுத்து அதற்கான பணிகளை மேற் கொண்டார். விவசாயம் செய்வதற்காக நிலங்களை தயார் செய்யும் பணியில் இறங்கினார். ஆனால் அந்த நிலத்திற்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை. அதற்கான தண்ணீர் வாங்க வேண்டும் என்றால் பிரெஞ்சு அரசாங்கத்திடம் அனுமதி வாங்க வேண்டும். அந்த அனுமதியை பெற பிரெஞ்சு மன்னர் மூன்றாம் நெப்போலியனை பார்க்க பலமுறை முயற்சி செய்தும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இருந்தாலும் ஹென்றி டுனாண்ட் மனம் தளராமல் மீண்டும் முயற்சி செய்து நெப்போலியனை பார்க்க வாய்ப்பு கிடைத்தது.

ஆனால் இருவரும் சந்தித்த இடம் போர்க்களமாகும். 1859 ஆம் ஆண்டு இத்தாலியின் வடக்கு எல்லையில் சொல்பரினா என்னும் இடத்தில் பிரான்ஸிக்கும், ஆஸ்திரியாவுக்கும் சண்டை மூண்டது. அங்கு பல உயிர்கள் மரணத்திலும், பல உயிர்கள் மரண விளிம்பிலும், மற்ற உயிர்கள் கை, கால்களை இழந்து துடித்துக்கொண்டு இருந்தன. இதை பார்த்த ஹென்றி டுனாண்ட் கண்களில் கண்ணீர் வடிந்தது. தண்ணீருக்கு சென்ற மனம் கண்ணீருக்கு பஞ்சம் இல்லாமல் நிலத்தில் ரத்த வெள்ளத்தில் கலந்தது.

அந்த அவலங்களை கண்டு தனது விவசாய கனவை புதைத்தார். அவரது மனதில் மனித நேய விதை முளைக்க ஆரம்பித்து விட்டது.

சண்டையில் 40,000க்கும் மேற்பட்ட படை வீரர்கள் காயப்பட்டும் இறந்தும் காணப்பட்டனர். இவர்களுக்குத் தேவையான மருந்து, முதலுதவி என்பன வழங்கப்படாத காரணத்தால் இந்நிலைமை ஏற்பட்டது. இதனை கண்ணுற்ற ஹென்றி டுனான்ட் உடனடியாக அவர்களுக்கு உதவி செய்வதற்காக பல தொண்டர்களை இணைத்து முதலுதவியும், மருத்துவ உதவியும் வழங்கி பலரைக் காப்பாற்றியிருந்தார். இனி வரும் காலங்களில் உலகில் எந்த நாடுகளிலும் போர், பஞ்சம், வெள்ளம், புயல், நில நடுக்கம் ஏற்பட்டால் அந்த இடத்திற்கு நேரடியாக சென்று உதவ வேண்டும் என்று முடிவு செய்தார்.

எனவே, 1862 ஆம் ஆண்டு போர் காலங்களில் தான் கண்ட காட்சியை வைத்து சொல்பரினா நினைவுகள் (Memory of Solferina) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பமாவதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றது. அதன்படி ஐரோப்பா முழுவதும் பயணம் செய்து ஒரு சமூக அமைப்பை உருவாக்க அனைத்து நாடுகளிடம் ஆதரவு மற்றும் நிதியை திரட்டினார். அவரின் விடா முயற்சியால் 1863 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி 15 நாடுகளின் ஆதரவுடன் ஜெனிவா நகரின் உடன்படிக்கையில் கையெழுத்திட்டு உலக செஞ்சிலுவை சங்கம் உதயமானது.

இச்சங்கத்தின் கொடியின் செஞ்சிலுவையானது ஜெனீவா நாட்டின் தேசியக் கொடியின் சிவப்பு பின்னணியில் உள்ள வெள்ளைச் சிலுவையை வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக மாற்றி அமைத்து உருவாக்கப்பட்டது. இதுதான் உலகளவில் காணப்படும் நடுநிலைமையுடன் செயல்படும் செஞ்சிலுவையின் அடையாளமாகும்.



காயப்பட்டவர்களை கவனிக்க தொண்டர்கள் இணைக்கப்படல் வேண்டும் மற்றும் இத்தொண்டர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்க சர்வதேச சட்டங்களை ஏற்படுத்தி, சர்வதேசம் அவற்றை அங்கீகரிக்க வேண்டும். என்ற இரண்டு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 15 நாடுகளின் ஆதரவுடன் இச் சங்கம் செயற்பட ஆரம்பித்தது. முதலில் 15 நாடுகள் மட்டுமே இந்த அமைப்புகளில் இடம்பெற்று இருந்தன. தற்போது 192 நாடுகள் செஞ்சிலுவை சங்கத்தில் உறுப்பினராக உள்ளன. அந்த நாடுகளில் சுகாதார சேவை, மருத்துவ சேவை, முதலுதவி சேவை, நிவாரணம் என பல்வேறு மனிதாபிமான சேவைகளை அந்தந்த நாட்டின் அரசுடன் சேர்ந்து செய்கிறது.

நாடு, இனம், மொழி, பால், மதம், ஜாதி, நிறம் என பலவாறான வேறுபாடுகளும் இன்றி உயிர் காக்கும் உன்னத சேவையினை மக்களுக்கு இவ் அமைப்பு வழங்கி வருகின்றது பாராட்டத்தக்க விடயமாகும். இதனை உருவாக்கிய ஜீன் ஹென்றி டுனாண்ட் பிறந்த நாளான மே மாதம் 8ஆம் தேதியான இன்று உலகம் முழுவதும் செஞசிலுவை சங்க தினமாக கொண்டாடப்படுகிறது.

இச் சங்கத்தின் பணிகள் பற்றி பார்க்கம் போது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது பெரும் முயற்சியால் போர் நடைபெறும் இடங்களிலும் மற்றும் புயல், வெள்ளம், தீவிபத்து, நிலநடுக்கம் ஏற்படும் இடத்திற்கும் நேரடியாக சென்று மருத்துவ உதவிகளை செய்து வருகின்றது. அதேபோல நாடுகள் இடையே போர் காலங்களில் கடைபிடிக்க வேண்டிய மனித உரிமைகளை கண்காணிக்கும் பணியினையும் மேற்கொள்கின்றது. அவ்வாறு உரிமை மீறல் நடந்தால், உடனே இந்த அமைப்பு சர்வதேச மனித உரிமை நீதிமன்றம் வரை சென்று வழக்கு பதிவு செய்யும். இக்கட்டான காலக்கட்டத்தில் நாடுகள் கடந்து, ஒரு மனிதனின் உயிரை காக்கும் கடவுள் போல செஞ்சிலுவை சங்கத்தின் பணிகள் உள்ளன.

செஞ்சிலுவைச் சங்கமானது மூன்று கிளைகளாக பிரிந்து தமது பணியினைச் செயல்படுகின்றது எனலாம்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கொள்கை ரீதியான வட்டி வீதத்தை மீண்டும் குறைத்தது மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கி கொள்கை ரீதியான வட்டி வீதத்தை மீண்டும் குறைத்துள்ளது.

பொருளாதார நடவடிக்கை செயலணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான மத்திய வங்கியின் நாணய சபை விசேட கூட்டம் நேற்றைய தினம் நடைபெற்றது. அதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிலையான வைப்பு வீதத்தை குறைக்க முடிவு செய்துள்ளது.

குறைந்த பணவீக்க நிலைமைகளின் போது கொரோனா தொற்று நோயினால் ஏற்பட்டுள்ள பொருளாதார தாக்கத்தை சமாளிக்க பொருளாதாரத்திற்கு மேலும் ஒத்துழைப்பு தேவை என்பதை கருத்தில் கொண்டு நாணய சபையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பணவியல் கொள்கை மற்றும் பண நிலைமைகளை எளிதாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஏற்ப, சந்தைக் கடன் விகிதங்கள் குறையவில்லை என நாணய சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, வட்டி விகிதங்களை மேலும் தாமதமின்றி குறைக்க நிதி நிறுவனங்களை வலியுறுத்துவதாகவும்,




இல்லையென்றால் வட்டி விகிதங்களைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# மகத்தான சேவையாற்றும் ..........

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1. செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு (ICRC)

1863 ஆம் ஆண்டு ஹென்றி டுனான்ட் அவர்களால் ஆரம்பிக் கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆயுத மோதல்கள் உள்நாட்டு கலகங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக உலக நாடுகளினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட நடுநிலைமையான சுயாதீன மனித நேய அமைப்பாகும். இது ஆயுத மோதல்களில் பல்வேறுபட்ட அமைப்புக்களால் வழங்கப்படும் சர்வதேச நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும். அதோடு துன்பப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உறுதிப்படுத்துகின்றது. இன்று 92 நாடுகளில் 13000 ஊழியர்களுடன் செயற்படும் ஓர் அமைப்பாகும்.

சிறுவர்களை போரில் பயன்படுத்துதலை மிக வன்மையாக கண்டிக்கும் இவ்வமைப்பு எல்லைப் போர், உள்நாட்டு யுத்தங்கள், இனக்கலவரங்கள் என்பவற்றையும் வன்மையாக பக்கச் சார்பில்லாமல் கண்டிப்பதால் சர்வதேசத்திற்கு ஆறுதல் அளிக்கும் ஒரு நிறுவன மாக மதிக்கப்படுகின்றது. போரி னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதுடன் போர்க்காலங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சர்வதேச நியமனங்களைப் பற்றி வலியுறுத்தும் அமைப்பாகும். இன்று போர்க்காலங்களின் தன்மை மாறி வருகின்றது. புதிய ஆயுதங்கள் பயன்படுத்தல், பாதிக்கப்படும் மக்களின் அளவு அதிகரித்து வருதல் என்பன காரணமாக, இந்த அமைப்பின் செயற்பாடு முன்பு ஒரு போதும் இல்லாதளவு சிக்கலாகியுள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் சர்வதேச செஞ்சிலுவைக் குழு போரில் மிகவும் கணிசமாக செயற்பட்டு வந்தது.

2. தேசிய செஞ்சிலுவையின் சங்கங்கள் (NS)

உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் இயக்கமான செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்கள், அனர்த்த நிவாரணம், சுகாதாரச் சேவை, சமூக சேவைகள், பலதரப்பட்ட மனிதாபிமானச் சேவைகள், அரசுக்கு துணையாக அதனது சொந்த நாட்டிலே செய்கின்றது. அதனது கொள்கைகளைப் பலப்படுத்த தேவையான வலைப்பின்னல் அமைப்புகொண்ட மனிதாபிமான இயக்கம் ஒன்றாக இது உள்ளது.

3. சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம் (IFRC)

1919 ஆம் ஆண்டில் இச்சங்கம் ஆரம்பிக்கப் பட்டது. தேசிய சங்கங்களினால் ஜெனீவாவில் 191 நாடுகள் கையொப்பமிட்டு உருவாக்கப்பட்டதாகும். இது இன, மத வர்க்கம் ஆகிய வேறுபாடு இன்றி மிகவும் பாதிக்கப்பட்ட மக்களது நிலைமைகளை மேம்படுத்துவதே இதன் நோக்கம். தனது நிவாரணப் பணிகள் ஊடாக தேசிய வளங்களைப் பலப்படுத்துகின்றது.

இவ் மூன்று சங்கங்கள் யாவும் மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுநிலைமை, சுயாதீனம், தொண்டர் சேவை, ஒருமைப்பாடு, சர்வதேச மயம், என்று முக்கிய ஏழு கொள்கையின் அடிப்படையிலே செயற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் பழைய நிலைக்கு திருப்பி கொண்டு வந்த பெருமை செஞ்சிலுவை சங்கத்தையே சாரும். செஞ்சிலுவை சங்கத்தின் சேவைகளையும், பணிகளையும் பாராட்டி மற்றும் உலக நாடுகள் போர்கள் செய்யாமல் அமைதியான முறையால் மனித உயிர்களை காக்க எடுத்த முயற்சிக்காக 1901ல் அமைதிக்கான நோபல் பரிசு செஞ்சிலுவை சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இன்று செஞ்சிலுவை சங்கத்தின் சேவை இல்லாத நாடே இல்லை என்று சொல்லுமளவிற்கு உலகம் முழுவதும் இந்த அமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பாக பார்க்கும் போது, 1932 ஆம் ஆண்டு மலேரியா நோயை கட்டுப்படுத்த பிரித்தானியாவால் இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதாக உருவாக்கப்பட்டது. 1948 இல் சுதந்திரத்திற்கு பின்பு 1949 ஆண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என உருவாகியது. 1952 இல் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கத்துடன் இணைந்தது. 1972 இல் இலங்கை செஞ்சிலுவை என பெயரிட்டு செயல்படத் தொடங்கிச் செயற்பட்டு வருகின்றது.

இலங்கையில் தற்போது 60,000 இற்கும் அதிகமான ஊழியர்கள் தொண்டர்களாக பணியாற்றி வருகின்றனர். நாட்டில் பல்வேறுபட்ட அனர்த்தங்கள் இடம்பெற்ற போது தமது பெறுமதியான நேரத்தை செலவிட்டு மக்களுக்கு பல்வேறு சேவைகளினை செய்து வருகின்றனர். இதன் தற்போதைய தலைவராக லுக்காஸ் பெட்ரிடிஸ் காணப்படுகின்றார்.

இவற்றின் சேவைகள் பற்றி பார்க்கும்போது, முதலுதவிப் பயிற்சி, முதலுதவி சேவை, அடிப்படை சுகாதார சேவை, மனிதனால் இயற்கையால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களுக்கு நிவாரணம் வழங்கல், இரத்ததான முகாம், நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தல், சமூகங்களுக்கு எயிட்ஸ் பற்றி பாதுகாப்பு விழிப்புணர்வு ஊட்டல், அனர்த்தத்துக்கு எப்படி முகம் கொடுப்பது என்பதற்கு பயிற்சி அளித்தல், அடிப்படை ஏழு கொள்கைகளை பரப்புரைகளை செய்தல், அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வகையிலும் உதவி செய்தல், சுனாமி வீட்டுத்திட்டம், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகள் புனரமைப்பு என்பன போன்ற பல்வேறு நிவாரணத்தினை செய்து வருகின்றது.

அதுமட்டுமல்லாது போர்கள் நடந்து முடிந்த பிறகு அந்த இடத்திற்கு சென்று, பழைய நிலையை உருவாக்க பல நாடுகளின் உதவிகளுடன் சேவைகளை செய்கின்றன. இலங்கையில் வட கிழக்கு மாகாணத்தில் இந்தியாவின் உதவியுடன் ஈழத்தமிழர்களுக்கு மறுவாழ்வை உருவாக்க, வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளது. அதேபோன்று ஒவ்வொரு நாடுகளிலும் செஞ்சிலுவை அமைப்பில் உறுப்பினர்களை சேர்த்து அவர்களுக்கு மருத்துவ பயிற்சி, முதலுதவி பயிற்சி மற்றும் மனிதநேய பண்புகளை வளர்க்க ஆலோசனை வழங்கப்படுகிறது.

மேலும் நடமாடும் மருத்துவ சேவை, ரத்ததானம், நோய் விழிப்புணர்வு, சாலைகள் புனரமைப்பு, நிவாரண உதவி வழங்கல் போன்றவை இந்த அமைப்பின் முதன்மை பணியாகும்.

அத்தோடு உலகம் முழுவதும் 24 மணி நேர அம்புலன்ஸ் சேவையை மக்களுடன் இணைந்து செய்து வருகிறது.

உலகைத் திருப்பி போட்ட சுனாமி, 2004 ஆம் ஆண்டு தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா, இலங்கை, மாலத்தீவு என 14 க்கும் மேற்பட்ட நாடுகளில் 2லட்சத்து 30 ஆயிரம் உயிர்களை குடித்து சென்றது. பல லட்சம் பேர் அங்கவீனர்களாகி, உடமைகளை இழந்து தவித்த போது அவர்களுக்குத் துணையாக ஐ.நா சபையுடன் இணைந்து சேவை செய்தது. அத்தோடு 2013 - 2015 மீள் கட்டமைப்பு என்ற கொள்கையின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டமாக இணைத்து, புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இணையதளங்கள் மூலமாக சமூக பணிகளை துடிப்புடன் செய்து வருகிறது எனலாம்.

இவ்வாறு இலங்கையில் ஏற்பட்ட ஒவ்வொரு அசாதாரண சூழ்நிலைகளின் போதும் மக்களுக்கு தன்னிகரில்லா சேவைகளை செய்து வருகின்றது. குறிப்பாக கொவிட் - 19 வியாபித்துள்ள இக் காலப்பகுதியில் பொதுமக்களையும், தடுத்து வைக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கும் முயற்சிகளுக்கு தேசிய அதிகாரிகளுக்கு உதவி வருகின்றது. 24 சிறைச்சாலைகளுக்கும், ஐந்து பிரதான பொலிஸ் தடுப்பு நிலையங்களுக்கும் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி சுகாதாரப் பொருள்களையும், (குளோரின், சவர்க்காரம்) தனிநபர் பாதுகாப்பு கருவிகளையும் விநியோகித்திருந்தது. அத்தோடு விநியோக நடைமுறையில் குறித்த பொருள்களின் பயன்பாடு பற்றியும், முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் உரிய அதிகாரிகளின் துணையுடன் விழிப்புணர்வினையும் மேற்கொண்டது எனலாம்.

மேலும் கொவிட் - 19 இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 20,000 இற்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு தமது உதவிகளை செய்திருக்கின்றது. துரிதமாக அதிகரித்துக் கொண்டுவரும் தொற்று நோய்க்கு மத்தியில் தேவைகளையும், முன்னுரிமைகளையும் சிறப்பாக பரிந்து கொண்டு, எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அதிகாரிகளுக்கு எம்மால் இயன்ற பங்களிப்பினை வழங்கி தொடர்ந்து ஒத்துழைப்புடன் செயற்படுவோம் என்ற மகிழ்ச்சியான செய்தியினையும் வழங்கியிருக்கின்றது.

எனவே நாடு, இனம், மொழி, பால், மதம், ஜாதி, நிறம் என பலவாறான வேறுபாடுகளும் இன்றி உயிர் காக்கும் உன்னத சேவையினை மக்களுக்கு இவ் அமைப்பு வழங்கி வருகின்றது பாராட்டத்தக்க விடயமாகும். இதனை உருவாக்கிய ஜீன் ஹென்றி டுனாண்ட் பிறந்த நாளான மே மாதம் 8ஆம் தேதியான இன்று உலகம் முழுவதும் செஞ்சிலுவை சங்க தினமாக கொண்டாடப்படுகிறது. மனிதநேயத்தை காக்கின்ற இந்த அமைப்பின் பணி உலகின் அனைத்து இடங்களுக்கும் கிளையாக சென்று சேவை செய்ய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# உணவகங்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,மே08

நாட்டில் கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாடுகளுடன் இயல்பு வாழ்க்கைக்கு மீளத் திரும்புவதற்கு வரும் மே 11ஆம் திகதி வழமை நிலைக்குக் கொண்டுவரும் நிலையில் உணவகங்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் மற்றும் பொது மக்களுக்கான ஆலோசனைகள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இதன்படி வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது மிகவும் ஆபத்தான கொரோனா தொற்று நோய் பரவி வருவதனால் உணவகங்களில் உணவு உண்ணும்போது பின்வரும் நடைமுறைகளை அவதானமாகக் கடைப்பிடியுங்கள்.

* இயலுமானவரை உணவினை வாங்கிச் சென்று உண்ணுங்கள்.
* உணவகத்தின் உள்ளே இருவருக்கு இடையில் ஆகக் குறைந்தது 3 அடி இடைவெளி இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
* உணவு கையாளும் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் முகக் கவசம் அணிந்திருப்பதையும் சுத்தமாக இருப்பதையும் உறுதிப்படுத்துங்கள்.
* உணவு கையாளும் நிறுவனத்தில் கடமையாற்றும் வேலையாள்கள், 2
* மணித்தியாலத்திற்கு ஒரு முறை ஓடும் நீரில் சவர்க்காரமிட்டு சரியான முறையில் 20 செக்கன்களாவது கைகளைக் கழுவுவது உறுதி செய்யப்படவேண்டும்.
* உள் நுழையுமிடத்தில் வாடிக்கையாளர்கள் கைகளைக் கழுவுவதற்கான வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
* சிறிதளவேனும் காய்ச்சல், இருமல், தொண்டை நோ போன்ற கொரோனா தொற்றின்
* குணங்குறிகளுடைய வேலையாள்கள் எவரும் உணவு கையாளும் நிறுவனத்தினுள்ளோ
* வளவினுள்ளோ கடமையில் ஈடுபடலாகாது.
* பொதுமக்கள் உணவகங்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தங்களது பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு மேற்கொள்ள முடியும்.

என்று உள்ளது.

# வடமராட்சி வடக்கு, கிழக்குக் கடலில் சட்டவிரோத மீன்பிடிக்குத் தடை விதிப்பு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே08

வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பபட்டுவந்த கடற்றொழில் நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கான பணிப்புரையை கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளுக்கு விடுத்துள்ளார் என ஈ.பி.டி.பியின்செய்திக் குறிப்பு தெரிவித்தது.

தமது வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத கடற்றொழிலை தடுத்து தமது இயல்பான கடற்றொழிலை மேற்கொள்ள வழிவகை செய்து தருமாறு வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கு கடற்றொழிலாளர் சம்மேளனங்கள் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தன.

இந்நிலையில் அந்தக் கடற்றொழிலாளர்களது நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த சுருக்குவலை, ஸ்கூபா டைவிங், பர்சின்வலை மீன்பிடி மற்றும் வெடி வைத்து மீன்பிடிக்கும் முறை, வின்ச் பயன்படுத்தி செய்யப்படும் மத்தல் மீன்பிடி, சதுப்புநில மரங்களை வெட்டி அதை வைத்து மீன்பிடி நடவடிக்கை, மோனோபில மேண்ட் வலை மீன்பிடி,வெளிச்சம் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்பிடித்தல் உள்ளிட்ட சில சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை உடனடியாக



நிறுத்துமாறு அமைச்சர் துறைசார் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்

அத்துடன் அப்பகுதியில் தொழிலை மேற்கொள்ளும் அனைத்துப் படகுகளுக்கும் அவற்றின் இலக்கமும், மீன்பிடி அனுமதி என்பன அப்பகுதிகளின் துறைசார் காரியாலத்தில் பதிவுகளாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் பணித்துள்ளார்.

# சுன்னாகத்தில் இன்று காலை இரத்ததானம்

சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் தற்போதைய இரத்ததான தேவையைக் கருத்திற் கொண்டு இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்தில் இரத்ததான முகாம் நிகழ்வை இடம்பெறவுள்ளது.

இன்று காலை 08.30 மணி முதல் நடைபெறவுள்ள இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள போதிலும் குருதிக் கொடையாளர்கள் இரத்த வங்கிப் பதிவுப் புத்தகத்தை வீதிப் பாஸ் அனுமதியாகப் பயன்படுத்த முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேலன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# விடுமுறை தினங்களில் ஏற்கப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியற்றவை

## ஐ.தே.கவின் உயர்மட்டக் கூட்டத்தில் சட்ட வல்லுநர்கள் விளக்கம் அளிப்பு

விடுமுறை தினங்களில் மேற்கொள்ளப்பட்ட எந்தவோர் அரச செயற்பாடுகளும் செல்லுபடியாகாது. அதில், சட்டபூர்வமான தன்மை இல்லை என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் சட்ட வல்லுநர்கள், ஆகையால், நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையிலும் காத்திருப்பதே உசிதமானதென, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது வீட்டில், ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், நேற்றுமுன்தினம் கூடி, மேற்படி விவகாரம் தொடர்பிலும் நாட்டின் தற்போதைய நிலைமை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் அலரி மாளிகையில் நடத்தப்பட்ட முன்னாள் எம்.பிக்களுடனான சந்திப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

அதில், அரச விடுமுறை தினத்தில் முன்னெடுக்கப்படும் அரச செயற்பாடுகள் செல்லுபடியாகுமா? என்பது தொடர்பிலானவாதப்பிரதிவாதங்களும்முன்வைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை, திகதியை ஒத்திவைத்தமை மற்றும் நாடாளுமன்றத்தைக்கூட்டாமைஉள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால், நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னர் அடுத்தகட்ட நகர்வு குறித்துக் கலந்துரையாடுவதற்கு இந்தக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. இதில், ஐக்கிய தேசிய கட்சியின் சட்டவல்லுநர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

வேட்புமனுக்கள், பொறுப்பேற்றல் பிரச்சினையை ஒரு சட்டத்துக்குள் மட்டுமே வரையறுத்துப் பார்க்க முடியாது. நாடாளுமன்றத் தேர்தல் சட்டம், விடுமுறைச் சட்டம் ஆகிய இரண்டையும் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் விடுமுறை தினத்தில் வேட்பு மனுக்களைக் கையளித்தல், பொறுப்பேற்றல் ஆகியவற்றுக்கு எவ்விதமான இடையூறுகளும் உள்ளதெனக் குறிப்பிடப்படவில்லை என்று, அதன்பொது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

எனினும், விடுமுறைச் சட்டத்தின் 364ஆவது அத்தியாயத்தின் 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 'Dies non' எனும் இலத்தீன் வசனத்தை, சட்ட அகராதியின் பிரகாரம் மொழிபெயர்த்துப் பார்க்க வேண்டும் என்றும் அதில், விடுமுறை தினத்தின் போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்பாடும் சட்டரீதியானதாக அமையாதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று, சட்டவல்லுநர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இந்நிலையில், மார்ச் 16ஆம் திகதியன்று அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், மார்ச் 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்கள் விடுமுறை தினங்களாகுமென விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர், வேட்பு மனுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் அறிவித்தலொன்றை விடுக்கின்றார். அவ்வாறாயின், விடுமுறை தினங்களில் மேற்கொள்ளப்பட்ட எந்தவோர் அரச செயற்பாடுகளும் செல்லுபடியாகாது. அதில், சட்டபூர்வமான தன்மையே இல்லை. ஆகையால், நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையிலும் காத்திருப்பதே உசிதமானது என, ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

இதேவேளை, ஓய்விலிருக்கும் எம்.பிக்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைத்தமையானது, அரசாங்கம் மட்டுமே இச்செயற்பாட்டை முன்னெடுக்கிறதென்ற படத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகும். ஆகையால்தான், இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி பங்கேற்கவில்லை என ரணில் விக்கிரமசிங்க விளக்கியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தமையை முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன, ரணில் தலைமையிலான இக்கூட்டத்தில் வைத்துப் பாராட்டியுள்ளார்.

அத்துடன், புலி... புலி... என்றவர்களுக்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தற்போது பூனையாகிவிட்டது என்றும் இன நல்லுறவுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் தமிழர் பிரதேசங்களில் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை அரசாங்கத்தின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்கு நல்லதொரு சந்தர்ப்பமும் கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ளதென, அபே வர்தன தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷக்களுடன் கூட்டமைப்பு சேராது

## அடித்துக் கூறுகிறார் இராதாகிருஷ்ணன்



வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசவே கூட்டமைப்பினர் பிரதமருடனான சந்திப்பில் கலந்துகொண்டனர் என முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்வேலுசாமிஇராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மாறாக அவர்கள் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளும் நோக்கில் அந்த சந்திப்பில் பங்கேற்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் தீ விபத்து ஏற்பட்ட ஹட்டன் எபோஸ்ட்லி தோட்ட மக்களைச் சந்தித்து நிவாரண உதவிகளை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை தாம் சஜித் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிப்பதாலேயேஅந்தகூட்டத்தில்பங்கேற்கவில்லை எனவும் கூறினார்.

மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பணி நீக்கம், சம்பளக் குறைப்புக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாதாம்!

நாட்டில் தற்போதைய பொருளாதார சூழ்நிலையிலும் பணியாளர்களைப் பணியிலிருந்து நீக்குதல் மற்றும் சம்பளக் குறைப்பு மேற்கொள்ளல் என்பனவற்றுக்கு அனுமதியளிக்கப்படாது என தொழில் அமைச்சின் செயலாளர் சரத் அபே குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் முத்தரப்பு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிற்சங்கங்கள், தொழில்தருநர் மற்றும் தொழில் திணைக்களம் ஆகிய மூன்று தரப்புக்களும் இணைந்து இந்தக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

அநேக நிறுவனங்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ள போதிலும் பணியாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட முடியாது என சரத் அபே குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இந்த குழுவின் தலைவராக தொழில் அமைச்சர் கடமையாற்றுகின்றமையுடன் குழுவின் பரிந்துரைகள் விரைவில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட உள்ளன.




# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்




படம் 1


படம் 2

**படம் 1**
அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

**படம் 2**
வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'தொழிற்சாலை'**

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'ராஜகிரீடம் (முடி)' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

த. கபிலாஷ்
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

த. யதுனேஷ் - தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

பா. தனுபன் -தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

சிறாந்தி சிறிசுதாகரன் - தரம் 1
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

பென்சித் றஜாந்தி சிறிசுதாகரன் -தரம் 5
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

எவ். ஸுஹைறா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

டி. ஹரிஸ்மன் -தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

எம். எல். எவ். பஸ்லுல்லாஹ் - தரம் 7
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

ஜி. பவித்திரன் -தரம் 8
யா/ ஹாட்லிக் கல்லூரி

ஜி. வர்சிகா -தரம் 3
வல்வை அமெரிக்கன்மிசன் தமிழ்க்
கலவன் பாடசாலை

உ. ரோஷித் -தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எம். ஐ. எவ். ஹுமைரா -தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

உ. ஆராதனா -தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எஸ். சிவசாகித்தியன் -தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

பரணீதரன் பிவிசன் -தரம் 2
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

எம். நஸீம் -தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

பரணீதரன் லதுசன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. ஹரிஷ் -தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் -தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

எம். ஐ. எம். அயான் -தரம் 1
பு/ மதவாக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம்

வி. தனிஸ்ரன் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். சி. ஜோசுவா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

மயூரன் தேனுகா -தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

லோ. சிவயாணு - தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

திலகராஜ் திலக்சயன் -தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

டி. அபிலாஷ் -தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

தி. கோவெழிலன் -தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா -தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

எம். என். ஹிமா -தரம்5
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

சி. சிவகலை -தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய
வித்தியாலயம்

ரங்கதாஸ் பவினேஷ் -தரம் 1
யா/ மகாஜனாக் கல்லூரி

பா. வாஹினி -தரம் 4
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

இ. பவிஷான் -தரம் 3
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

கு. சாருன் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

றொபின்சன் ஷெர்வின் -தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

உ. சிறிநயா -தரம் 5
யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்

டேவிட் ரன் பிலெஸ்ஷின் -தரம் 5
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

த. ஆரூசன் -தரம் 2
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

இ. சிந்தூரிகா -தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் - தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

## தொழிற்சாலை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு
# சித்திரப்போட்டி

**இன்று (08/05/2020) தலைப்பு**
**தொழிற்சாலை**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# வழமை நிலை மீண்டதாக எண்ணாதீர்!

## வைரஸின் அச்சுறுத்தல் எம்மைச் சூழ உள்ளதாம்

கொழும்பு, மே 08

**ஊரடங்கு தளர்த்தப்படுவதால் நிலைமை வழமைக்கு திரும்பிவிட்டதாக மக்கள் நினைத்துவிட வேண்டாம் என தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் குறித்த நிலைவரம் மற்றும் அடுத்ததாக முன் னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து கூறுகையில் அவர் இதை தெரிவித் துள்ளார்.

மேலும் கூறுகையில் –

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டில் உள்ள தாகக் கூறுகிறோமே தவிர நாட்டில் கொரோனா வைரஸ் இல்லை என்ற சான்றிதழை ஒரு போதும் வழங்க முடியாது.

எம்மைச் சுற்றி வைரஸ் அச்சுறுத்தல் இருந்துகொண்டு உள்ளதென்பதை மக்கள் நினைவில் வைத்துக்கொண்டு நடமாடுங்கள்.

வைரஸ் தொற்றுரோய் பரவலை கட்டுப்படுத்தியுள்ளோம். இனி ஒருபோதும் வைரஸ் பரவாது என்ற சான்றிதழை வழங்க முடியாது. மீண்டும் ஏதாவது ஒரு பிரதேசத்தில் எவருக் கேனும் கொவிட் – 19 வைரஸ் தொற்றுநோய் ஏற்படலாம்.

ஆகவே அது குறித்த ஆய்வுகளை செய்தவண்ணமே நாம் இருப்போம். ஒரு வேளை அவ்வாறு எவருக்கேனும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பின் உடனடியாக அவர்களை தனிமைப்படுத்தவும், அவர்களுடன் தொடர்புகளில் இருந்தவர்களையும் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்த வும் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

வைரஸ் தொற்றுப்பரவல் சமூக தாக்கத்தை ஏற்படுத்தவதைத் தடுக்க தொடர்ந்தும் நட வடிக்கை எடுக்கப்படும்.

உலக அளவில் கொவிட் – 19 வைரஸ்



தொற்றுநோய் முழுமையாக அழிக்கப்படும் வரையில் அல்லது அதற்கான மருந்து பாவனைக்கு வரும் வரையில் நாம் தொடர்ச்சியாக மருத்துவ பரிசோதனைகளை முன்னெடுத் தாக வேண்டும்.

ஆகவே இத்துடன் அனைத்தும் முடிந்து விட்டது என்ற மகிழ்ச்சியுடன் அடுத்த வாரம் தொடக்கம் எம்மால் வழமையான வாழ்க்கையை வாழ முடியும் என நினைத்துவிட வேண்டாம்.

11 ஆம் திகதி ஊரடங்கை தளர்க்கப்படும் நிலையில் மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும், மக்கள் நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபடும் வேளைகளில் நாம் இன்னமும் கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து விடுபடவில்லை என்பதை மனதில் வைத்திருக்க வேண்டும். – என்றார்.

# நாடாளுமன்றக் கலைப்பு, தேர்தல் இரண்டுக்கும் எதிராக 10 மனுக்கள்

எதிர்வரும் ஜூன் 20 இல் தேர்தலை நடத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தடுக்குமாறு கோரியும், அதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு வழுங்கும்படி விண்ணப்பித்தும், நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்புகளைச் செல்லுபடியற்றதாக்குமாறு வேண்டியும் உயர்நீதிமன்றத்தில் 10 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மைத்திரி குணரத்னவின் மகனான, சட்டத்தரணி சரித குணரத்ன முதலில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

அது தவிர, ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் விக்டர் ஐவன், ரீ.எம். பிரேமவர்தன, பேராசிரியர் அன்டன் மீமண, ஏ.எம். ஜிப்ரி, எஸ். சிவகுருநாதன், மஹிந்த ஹத்தக்க, எச்.டி.எஸ்.எப்.டி. ஹேரத், எம்.எஸ். ஜயகொடி ஆகிய 08 பேர் சேர்ந்து மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகமும் முன்னாள் எம்.பியுமான ரஞ்சித் மத்தும பண்டாரவினாலும் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு, அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, அதன் உறுப்பினர்கள், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, சுகாதார சேவை பணிப்பாளர் அனில் ஜாசிங்க, சட்ட மாஅதிபர் ஆகியோர் இம்மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜூன் 20 இல் தேர்தல் நடத்துவதை தடுக்குமாறு கோரி இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மார்ச் 02 இல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஏப்ரல் 25 இல் தேர்தல் நடத்த திகதி நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் கொவிட் 19 தொற்றுடன் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக மார்ச் 21 இல் வர்த்தமானியூடாக அறிவிக்கப்பட்டது.

எனினும் தற்போது ஜூன் 20 இல் தேர்தல் நடத்தப்படுமென வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 03 மாதத்தினுள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதனை விடுத்து ஜூன் 20 இல் தேர்தல் நடத்துவது சட்டவிரோதமானதெனவும் மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவியுள்ள நிலையில் தேர்தல் நடத்துவது வாக்காளர்களின் உயிருக்கு ஆபத்தாக அமையும். எனவே தேர்தல் நடத்துவதை தடுப்பது தொடர்பாக உத்தரவிடுமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளதோடு, தேர்தல் நடத்தும் வர்த்தமானி அறிவிப்பை இரத்துச் செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நடவடிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறும் நிலையில் இந்த மனுக்கள் அன்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park 077 757 0124 021 567 5566
NPcpark 077 336 6443 021 222 9581
northernpcpark 075 555 7327 021 222 2050
Northern PC Park 071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576
சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.05.2020 இல் வெளியிடப்பெற்றது.